கிராமங்களில் வாழ்கின்ற இரண்டாயிரம் விவசாயப் பெருமக்கள் பயன்பெறுவார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் மறுபரிசிலனை செய்து, இந்த ஆண்டே பணியை அரசு தொடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள 1,760 மீட்டருக்கான சீர் செய்யும் வேலையை, இப்பணியின் அவசியம் கருதி வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.கே. சிவசாமி.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் செய்வதற்கு உறுதி அளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஈ) வேலூர், திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்குதல், நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. ஞானசேகரன், செ.கு. தமிழரசன் மற்றும் ப. அரசன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க அரசு சட்டம் இயற்றி ஆணை பிறப்பித்தும் இன்னும் அதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் தொடங்க 9—3—2002—ல் ஆளுநர் உரையில் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதற்கிணங்க சட்டப் பேரவையில் இதற்கான சட்டம் இயற்றப்பட்டது. அரசுக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தை எதிர்த்துக் கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் போராட்டம் நடத்தியது. இதைத் தொடர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆசிரியர்களின் பணி உரிமைகள் காக்கப்படும் என்று வாக்களித்து, அதுபற்றி ஆராய குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உறுதிமொழிகளை ஏற்று கல்லூரி ஆசிரியர்கள் சங்கம் 2—9—2002 முதல் போராட்டத்தை விலக்கிக் கொண்டது.

மேற்சொன்ன குழு தனது பரிந்துரைகளை அரசுக்கு அளித்தது. இப்பரிந்துரைகளைப் பரிசீலித்து, முழுமையாக ஏற்று, அரசாணை (நிலை) எண் 279, உயர்கல்வி, நாள் 1—10—2002—ல் அரசு ஆணையிட்டது. இதைத் தொடர்ந்து தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் திருத்தச் சட்டம், 2002 மற்றும் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகச் சட்டம், 2002 ஆகியவற்றுக்குத் திருத்தங்கள் அவசரச் சட்டம் வாயிலாகக் கொண்டு வரப்பட்டன.

திருவள்ளுவர் பல்கலைக்கழகச் சட்டத்திற்கு ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவர் ஆகியோரின் ஒப்புதல் பெறப்பட்டு, 16—10—2002 முதல் இச்சட்டம் அமலுக்கு வருவதாக அரசு ஆணையிட்டுள்ளது.

முனைவர் அண்ணாவி சுசீலா திருமாறன், மதுரையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் மனையியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதல்வரை திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகவும், முனைவர் எஸ். மகாலிங்கம், வேலூரிலுள்ள சென்னைப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க மைய இயக்குநரை அப்பல்கலைக்கழகத்தின் முதல் பதிவாளராகவும் நியமனம் செய்து அரசு ஆணையிட்டது. அவர்கள் பதவி காலம் முடிந்து விட்டதால் அவர் விடுவிக்கப்பட்டார். பதிவாளர் (பொறுப்பு) ஆக முனைவர் எஸ். சின்னம்மை என்பவரை 6—1—2003 முதல் பல்கலைக்கழகம் நியமித்துள்ளது. பல்கலைக்கழகத்தின் அன்றாடப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு குழு --Adhoc Committee-- ஒன்றை உருவாக்கியுள்ளது. உயர்கல்வித் துறைச் செயலாளர், சட்டத் துறைச் செயலாளர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் ஆகியோர் இதில் உறுப்பினர்கள் ஆவார்கள். 22—1—2003 அன்று பிற்பகல் 3 மணியளவில் இக்குழு உயர் கல்வித் துறைச் செயலாளர் அறையில் கூடியது. இக்கூட்டத்தின்போது திருவள்ளுவர் பல்கலைக்கழகம் குறித்த முக்கிய பொருட்கள் விவாதிக்கப்பட்டன.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. அரசன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

(உ) கொடைக்கானல், குன்னூர் அரசு மருத்துவமனைகள், இரத்த வங்கிக் கட்டடம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் சி. ஞானசேகரன், கா. சுந்தரம், ஏ.கே. செல்வராஜ மற்றும் கு. அன்பழகன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கு. அன்பழகன்.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “கொடைக்கானல், குன்னூர் அரசு மருத்துவமனைகளில் இரத்த வங்கிக் கட்டடம் கட்டியும், உபகரணங்கள் வழங்கியும் இன்னும் அவை திறக்கப்படாமல் உள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் உள்ள குருதி வங்கி செயல்படுவதற்கு அனைத்துத் துரித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மேற்காணும் மருத்துவமனைக்கு உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. உரிமம் பெற வேண்டி, உரிமத் தொகையான ரூ.1000 செலுத்தப்பட்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசு மருந்து ஆய்வாளர்கள் தணிக்கை செய்து சில குறைகளைச் சுட்டிக்காட்டினார்கள். இதற்கிடையில் உரிமக் கட்டணத்தை மைய அரசு ரூ.7500 ஆக உயர்த்தியது. உரிமக் கட்டணம் முழுவதும் தற்போது செலுத்தப்பட்டு குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டு உரிமம் வழங்க மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், மருந்துக் கட்டுப்பாடு இயக்குநருக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளார். இந்த ரத்த வங்கியை ஆய்வுக் குழு மீண்டும் 24—1—2003—ல் தணிக்கைச் செய்து முடித்துள்ளது. இந்த வங்கிக்கான உரிமம் புதுடில்லி, மத்திய உரிம ஒப்புதல் அதிகாரிகளிடமிருந்து பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல் குன்னூர் அரசு மருத்துவமனையில் உள்ள